# கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

# தென்னை பயிர்ச்செய்கை சபை

# பதவி வெற்றிடங்கள்/2024

## தென்னை பயிர்ச்செய்கை சபையின் மாதிரித் தென்னந் தோட்ட (மா.தெ.தோ) சேவையின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### பதவி: தகவல் தொழில்நுட்ப அதிகாரி (மா.தெ.தோ) IIஆம் தரம் (JM 1-2) - IIஆந் தரம்

**சேவை இடம் :** தலைமை அலுவலகம் - 01 பதவி

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கணனி பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்று

அத்துடன்

அரசு/ கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பான ஒரு (01) வருட சேவை அனுபவம்.

**சம்பள வகுதி :** JM 1-2

**சம்பள அளவு:** ரூபா 43,355 – 755x10 – 1135x18 – 71,335

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### பதவி: சட்ட அதிகாரி (மா.தெ.தோ) IIஆம் தரம் (JM 1-2) - IIஆந் தரம்

**சேவை இடம் :** தலைமை அலுவலகம் - 01 பதவி

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் சட்டம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் ஒரு வருடத்திற்குக் குறையாத செயல்நிலை அனுபவத்தைப் பெற்றிருத்தல் / மேல் நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் ஒரு வருடத்திற்குக் குறையாத செயல்நிலை சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**சம்பள வகுதி:** JM 1-2

**சம்பள அளவு :** ரூபா 43,355 – 755x10 – 1135x18 – 71,335

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

### பதவி: கணக்காய்வு அதிகாரி (மா.தெ.தோ) IIஆம் தரம் (JM 1-2) - IIஆந் தரம்

**சேவை இடம் :** தலைமை அலுவலகம் - 01 பதவி

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

நிதி நிர்வாக விடயம் சகிதம் வியாபார முகாமைத்துவம் தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பட்டமொன்று/ வர்த்தகமாணி பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்/ கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

அரசு/கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு தொடர்பான ஒரு (01) வருட சேவை அனுபவம்.

**சம்பள வகுதி :** JM 1-2

**சம்பள அளவு :** ரூபா 43,355 – 755x10 – 1135x18 – 71,335

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்ளவாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

### பதவி: உதவி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு முகாமையாளர் (தோட்டம்) (மா.தெ.தோ) IIஆந் தரம்

**சேவை இடம் :** தலைமை அலுவலகம் - 01 பதவி

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :**

சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் பாடம் சகிதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம்

அத்துடன்

அரச / கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் 04 வருட சேவை அனுபவம்

**சம்பள வகுதி :** JM 1-2

**சம்பள அளவு :** ரூபா 43,355 – 755x10 – 1135x18 – 71,335

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரச/கூட்டுத்தாபன/சபைகளில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்ளவாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனைய நிபந்தனைகள்**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கான உடல், உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள்**

- இதன் பிரகாரம் 2024-07-19ஆம் திகதியில் இயைபுடைய தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் அல்லது தம்மால் தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புதல் வேண்டும். கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் தொடர்பான விபரங்களை உள்ளடக்கி அத்தகைமைகளை உறுதி செய்யக்கூடிய சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் தற்போது அரச/ கூட்டுத்தாபன/ சபைகளில் சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் வீதம் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களும் 2024-08-02ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், தென்னை பயிர்ச்செய்கை சபை, இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இங்கு குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் உள்ளதாயின் அது குறித்து ஆட்சேர்க்கும் அதிகாரியினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். இப்பதவிகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட விசாரணைகள் இதற்கான தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**தென்னை பயிர்ச்செய்கை சபை,**
**இல. 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல**

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை பின்வரும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அதேபோல் அவ்வாறு பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு ஏதேனும் அசௌகரியங்கள் இருக்குமாயின் தம்மாலேயே தயாரித்துக்கொண்ட மாதிரியொன்றைப் பயன்படுத்தி விண்ணப்பத்தை அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

https://coconutsrilanka.lk/